அடையாள இலக்கம்:

D

அகில அவுஸ்திரேலியா, நியூசிலாந்து
தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் - 2022

அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்

Australian Society of Graduate Tamils

# எழுத்தறிவுப் போட்டி

# அதிமேற் பிரிவு

(12 – 14 வயதுப் பிரிவு)

நேரம்: 2 மணித்தியாலங்கள்

பரீட்சைத் தாளை வாசிக்க மேலதிகமாகப் 10 நிமிடங்கள் வழங்கப்படும்.

| மொத்தப் புள்ளிகள் | |
|---|---|

**(அ) கீழே தரப்பட்ட சொற்களைப் பிரித்து எழுதுக** (5 புள்ளிகள்)

1. ஆறாயிரம் ________________ + ________________

2. மெல்லப்பேசினாள் ________________ + ________________

3. தங்கவளையல் ________________ + ________________

4. தமிழிலக்கியம் ________________ + ________________

5. தினமொரு ________________ + ________________

**(ஆ) கீழே தரப்பட்ட சொற்களுக்கு எதிர்ப்பொருள் கொண்ட சொற்களை எழுதுக.** (5 புள்ளிகள்)

1. பழையது = ________________________

2. சிறுபான்மை = ________________________

3. இருள் = ________________________

4 உயர்வு = ________________________

5. இளமை = ________________________

**(இ) கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களிற் கோடிடப்பட்டுள்ள இடங்களில் பொருத்தமான சொற்களை எழுதி வாக்கியங்களைப் பூர்த்தி செய்க.**

(10 புள்ளிகள்)

1) இளமையற் கல்வி சிலையில்________________________ என்பது ஒரு பழமொழி.

2) செல்வியைப் பிடிக்காத மதி எல்லோரிடமும் அவளைப் பற்றிக் ________________________ கூறினாள்.

3) தாயாரின் வருகையை எதிர்பார்த்து சிறுவன் வழிமேல் விழி வைத்துக் ________________________.

4) கார்மேகத்தைக் கண்ட மயில் ________________________ விரித்து ஆடியது.

5) அண்மையில் பெய்த கடும்மழை பல உயிர்களுக்கும் உடைமைகளுக்கும் பெரும் பெருஞ் ________________________ விளைவித்தது.

6) போட்டியின் ________________________ இன்னமும் அறிவிக்கப்படாததால் நாம் காத்திருக்கிறோம்.

7) மாணவர்கள் தாம் படித்த பாடங்களை ________________________ படிப்பது மிகவும் நல்லது.

8) மரத்துடன் கட்டியிருந்த மாடு ________________________ கொண்டு ஓடியது.

9) பெற்றோரை ________________________ என்பது தமிழர்களது உயர்ந்த அறங்களில் ஒன்றாகும்.

10) உடல் நன்றாக இயங்குவதற்குச் சத்துள்ள ________________________ தேவை.

**(ஈ) கீழே கோடிடப்பட்ட சொற்களுக்கு மிகப் பொருத்தமான ஒத்த கருத்துள்ள சொற்களின் கீழே கோடிடுக.** (10 புள்ளிகள்)

1. நமக்கு **சந்தர்ப்பம்** கிடைக்கும் போது, அதை நாம் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.
   அ. அதிர்ஷ்டம் ஆ. வாய்ப்பு இ. நேரம் ஈ. பொருள்

2. நம்முடைய **ஆற்றல்** சிலவேளைகளில் நமக்கே தெரியாமற் போவதுண்டு.
   அ. சோம்பல் ஆ. ஆர்வம் இ. திறமை ஈ. பெருமை

3. ஒவ்வொருவரும் பொதுத் **தொண்டில்** பங்கெடுத்து நாட்டுக்கு சேவை செய்ய வேண்டும்
   அ. கூட்டுச்செயலில் ஆ. சேவையில் இ. தீரச்செயலில் ஈ. அறச்செயலில்

4. அன்னைக்கு **ஒப்பானவர்** இவ்வுலகில் வேறுயாரும் இல்லை.
   அ. எதிரானவர் ஆ. சமமானவர் இ. துணையானவர் ஈ. அன்பானவர்

5. சில வழக்குகளுக்குத் தக்க **தடயங்கள்** கிடைக்காததால் விசாரணைகள் பாதியிலேயே கைவிடப்படுகின்றன.
   அ. செய்திகள் ஆ. குறிப்புகள் இ. ஆதாரங்கள் ஈ. தரவுகள்

6. அறிவுடன் அன்பும் **பணிவும்** மிக்க ஒருவரால்தான் வாழ்வில் உயர்வு பெறமுடியும்.
   அ. அடக்கமும் ஆ. இரக்கமும் இ. நம்பிக்கையும் ஈ. ஆர்வமும்

7. அன்னை திரேசாவின் தன்னலமற்ற தொண்டுக்கு இந்த **ஞாலமே** தலை வணங்கியது.
   அ. நாடே ஆ. உலகமே இ. கண்டமே ஈ. வீடே

8. முற்கால மன்னர்கள் **அறத்தின்** அளப்படையில் ஆடசி செய்தனர்.
   அ. தர்மத்தின் ஆ. வீரத்தின் இ. இரக்கத்தின் ஈ. அன்பின்

9. ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு நாட்டு நலனில் **அக்கறை** காட்டும் மக்களே பெரிதும் காரணமாக இருக்கின்றனர்.
   அ. அன்பு ஆ. பாசம் இ. கரிசனை ஈ. உணர்ச்சி

10. நம் தேசியக்கொடி நம் நாட்டின் மதிப்புமிக்க **அடையாளமாக** விளங்குகிறது.
    அ. சின்னமாக ஆ. குறியாக இ. வடுவாக ஈ. எண்ணமாக

**(உ) கீழே தரப்பட்ட ஒவ்வொரு சொல்லையும் பாவித்து அதன் பொருள் விளங்கக் கூடியதாகச் சரியான வசனம் அமைக்கவும்.** (20 புள்ளிகள்)

அ. **அலை :** ……………………………………………………………………………

……………………………………………………………………………………

**அழை** : ……………………………………………………………………………

……………………………………………………………………………………

ஆ. **நிரை :** ……………………………………………………………………………

……………………………………………………………………………………

**நிறை :** ……………………………………………………………………………

……………………………………………………………………………………

இ. **அலகு :**……………………………………………………………………………

……………………………………………………………………………………

**அழகு** :……………………………………………………………………………

……………………………………………………………………………………

ஈ. **என்பது :**……………………………………………………………………………

……………………………………………………………………………………

**எண்பது :**……………………………………………………………………………

……………………………………………………………………………………

உ. **பரந்த** :……………………………………………………………………………

……………………………………………………………………………………

**பறந்த** :……………………………………………………………………………

……………………………………………………………………………………

**(ஊ) கீழே தரப்பட்ட கவிதையைப் கருத்தூன்றிப் படித்த பின்னர் கீழேயுள்ள கேள்விகளுக்குத் தகுந்த விடைகளைத் தருக.** (புள்ளிகள்: 10)

அம்மா நான் விளையாடப் போறேன் - கையில்
அன்புடன் பட்சணம் தந்தனுப் பென்னை
சும்மா நான் உட்கார மாட்டேன் - நல்ல
தோழர் அழைக்கின்றார் நாழிகை ஆச்சு.

பூப்பறித் தாடுவோம் கொஞ்சம் - சாமி
பூசைசெய் தாடுவோம் பூரதம் கட்டி
வேப்ப மரத்தடி மண்ணில் - சிறு
வீடுகள் கட்டி விருந்துகள் செய்வோம்

பாட்டுக்கச் சேரிகள் செய்வோம் - நான்
பாடுவேன் மத்தளம் போடுவான் கிட்டு
கேட்டுச் “சபாஷ்” எனச் சொல்வார் பின்பு
கிண்கிணி கட்டி நடனங்கள் செய்வோம்.

வேட்டிக ளால்திரை கட்டிப் - பல
வேடங்கள் போட்டொரு நாடகமாடிக்
காட்டுவோம் பாரதக் காட்சி நான்
கண்ணனின் சொற்படி காண்டீப னாவேன்.

சுத்தானந்த பாரதியார்

**<u>கேள்விகள்:</u>**

1) இந்தக் கவிதையில் குறிப்பிடப்பட்ட பின்வரும் சொற்களின் கருத்தை விளங்கி ஒத்த பொருட்சொல் தருக. (3 புள்ளிகள்)

| **கவிதைச் சொல்** | **ஒத்த பொருட்சொல்** |
|---|---|
| பட்சணம் | |
| பூரதம் | |
| நாழிகை | |

2) இப்பாடலில் குறிப்பிடப்பட்ட விளையாட்டுக்கள் நான்கினை எழுதுக. (4 புள்ளிகள்)

- ________________________________________
- ________________________________________
- ________________________________________
- ________________________________________

3) பாரதக்கதையில் இடம்பெறுவதாகக் குறிப்பிடப்படும் இரு கதாபாத்திங்கள் எவை? (2 புள்ளிகள்)

- ________________________________________
- ________________________________________

4) இப்பாடலில் எடுத்துக்காட்டப்பட்டுள்ள தமிழர் பண்பாடு அல்லது விழுமியம் என்ன? (1 புள்ளி)

____________________________________________

**(எ) பின்வரும் உரைப்பகுதியைக் கருத்தூன்றிப் படித்து, அதன்பின்னர் கீழ்க்காணும் வினாக்களுக்கு உங்கள் சொந்த வசனங்களில் விடையெழுதுக.** (15 புள்ளிகள்)

நோர்வே நாட்டின் தலைநகரான ஒஸ்லோ மாநிலத்தில்,அனைத்துலக கோடைகாலப் பள்ளி ஒன்று இயங்கி வருகின்றது. ஆண்டுதோறும் தொண்ணூறுக்கு மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்தவர்கள் இப்பள்ளியில் பயில்கிறார்கள். மனித உரிமைகளைப் போற்றும் நோர்வேயின் பாரம்பரியத்தையொட்டி அனைத்துலக கோடை பள்ளி ஆரம்பிக்கப்பட்டதாகவும், ஐந்து முதல் எட்டு வாரங்களுக்கு இந்தக் கோடைப்பள்ளியில் பயிற்சிகள் நடைபெறுகின்றன.

மனித உரிமைகளைப் பற்றிய உணர்வுகளைத் தூண்டி அதனை வளர்ப்பதுதான் இப்பள்ளியின் தலையாய பணி. பல நாட்டினர், பல மதத்தினர் வேறுபாடுகளைக் கடந்து கூட்டுக் குடும்பமாக இணைந்து ஒரு சகோதர இனமாக வாழ்ந்தால்தான் ஒருவரை மற்றவர் புரிந்துகொள்ளும் மனப்பக்குவம் பெறுவர். அத்தகைய நேச மனப்பான்மையை இப்பள்ளி ஏற்படுத்துகின்றது.

பள்ளிப் பயிற்சிகளில் கிடைந்த அனுபவமும், இப்பள்ளிக் காலத்தில் நாட்டின் பல பகுதிகளைச் சுற்றிப் பார்த்தபோது பெற்ற இன்ப உணர்வுகளும் தமது உள்ளத்தில் பசுமரத்தாணிபோல் இருப்பதாக அங்கு சென்ற மாணவர்கள் ஐயமின்றிக் கூறுகிறார்கள். பள்ளியில் சேர்ந்த முதல் வார இறுதியில் ஒஸ்லோ நகர்ப்புறத்திற்கு வெளியே அடர்ந்த காடுகளுக்கு இடையே பன்னாட்டு மாணவர்களும் ஒன்றாக நடப்பது அவர்களுக்கு ஒரு அற்புதமான அனுபவம்.

இங்கு கற்கும் பல்வேறு நாட்டினரும் தாம் கற்றதை தத்தமது நாட்டின் தேவைகளுக்கேற்பவும், முன்னேற்றத்துக்காகவும் நடைமுறைப் படுத்துவதற்கான வாய்ப்புகளாகவே கருதுகின்றனர்.

இரவு ஒரு மணி அளவில்கூட நோர்வே மக்கள் மெதுவோட்டத்தில் ஈடுபட்டிருப்பர். கோடை காலத்தில் அவர்கள் ஒரு வினாடி கூட வீணடிக்க மாட்டார்கள். அப்போதுதான் அவர்கள் வெயிலை முழுமையாக அனுபவிக்க முடியும். குளிர்காலத்தில் காலை பள்ளிக்குச் செல்லும்போதும் சரி, வீடு திரும்பும்போதும் சரி ஒரே இருட்டாக இருக்கும். மின்சாரம் இல்லையென்றால் அவர்கள் வாழ்க்கையே நிலைகுத்திவிடும். கோடையை மக்கள் அனுபவிப்பதற்காக அரசாங்கமும வேண்டிய வசதிகள் செய்து தருகிறது. கோடையில் எல்லா அலுவலகங்களும் ஒரு மணி நேரம் முன்னதாக மூடப்படும். மேலும், உல்லாச பயணங்கள் செல்ல ரயில், விமான கட்டணங்களில் விசேஷ சலுகைகளும் வழங்கப்படுகின்றன.

தனிமையையும், அமைதியையும் விரும்புபவர்கள் நோர்வே நாட்டினர். தங்கள் நாட்டின் இயற்கை வளத்தை எண்ணி பெருமிதமும் கொள்கின்றனர். இதனால், நோர்வே மக்களும், அரசாங்கமும் இயற்கையைப் பாழ்படுத்தக்கூடாது என்பதில் மிகவும் அக்கறையாகப் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். இந்நாட்டின் எண்ணெய் வளக் கண்டுபிடிப்பு நாட்டின் வளமான வாழ்வுக்கு மிகப்பெரிய ஒரு திருப்புமுனையாக அமைந்து வளங்கொழிக்கும் நாடாக நோர்வேயை விளங்கச் செய்கிறது.

## பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. கோடைப்பள்ளியினால் கிடைக்கும் பயன்கள் எவை எனக் குறிப்பிடப்பட்டுள்ளன? (4 புள்ளிகள்)

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

2. கோடைப்பள்ளிக்குச் செல்லும் மாணவர்களின் மனதில் எவை வேரூன்றி நிற்கும்? (2 புள்ளிகள்)

______________________________________________

______________________________________________

______________________________________________

3. நோர்வே நாட்டில் வாழ்வதற்கு மின்சாரம் அவசியம் ஏன் என கூறப்பட்டுள்ளது? (1 புள்ளி)

______________________________________________

______________________________________________

4. நோர்வே மக்களின் கோடை காலத்து வாழ்க்கை முறையையும், இதற்கு அரசாங்கம் எவ்வாறு உதவுகிறது என்பதையும் விளக்குக. (4 புள்ளிகள்)

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

5. நோர்வே நாடு இன்று பொருளாதார வளத்தில் சிறந்து விளங்குவதற்கான அடிப்படைக் காரணம் என்ன? (2 புள்ளிகள்)

______________________________________________

______________________________________________

______________________________________________

**(ஏ) பின்வரும் வினாக்களில் ஒன்றை தெரிவு செய்து 200 சொற்களுக்குக் குறையாது எழுதுக.** (25 புள்ளிகள்)

கணினி விளையாட்டுகளில் அதிக நேரத்தைச் செலவிடுகின்ற உமது பாடசாலை நண்பர்களுக்கு இந்தப் பழக்கம் தவறு என்பதை வலியுறுத்தியும், நேரத்தை எவ்வாறு பயனுள்ள வழிகளில் கழிக்கலாம் என்பது பற்றியும் பேச்சு ஒன்றினை எழுதுக.

**அல்லது**

உமது நண்பரின் செயல் ஒன்று இன்றுவரை உமது மனதை விட்டு அகலாது இருக்கின்றது. அந்த மறக்கமுடியாத செயலைப் பற்றியும் அதிலிருந்து நீர் பெற்ற அனுபவத்தையும் உணர்வுகளையும் விளக்கி கட்டுரை ஒன்றினை எழுதுக.

**விடைத்தாள் - ஊ)**

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

………………………………………………………………………………………………..…………

………………………………………………………………………………………………..…………